DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 532/2024
Miscellaneous :
Sessions : DW1
Deposition of Witness for

**மனுதாரர் ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பில் 279 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | டென்னீஸ் |
| Father / Husband Name | சிங்கராயர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.03.2026**

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு காசோலை என்னுடைய வங்கி காசோலை என்றால் இருக்கலாம். வழக்கு காசோலை எனது வங்கி காசோலை என்று என்னால் அருதியிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியவில்லை. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A, M.Ed, M.Phil, NET, SET படித்துள்ளேன். வழக்கு காசோலை என்னுடைய வங்கி காசோலை என்றாலும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்தை நான் தான் செய்தேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு மசாஆ 3 தான் மனுதாரர் நான் கொடுத்ததாக சொல்லப்படும் வழக்கு காசோலையில் வங்கியில் செலுத்தி திருப்பப்பட்டதால் எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் மேற்படி அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டதாகும்.

2. மேற்கண்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை மசாஆ 4 ல் உள்ளது எனது கையொப்பம் என்றால் சரிதான். ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பமும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும் ஒன்றுதான் என்றால் இல்லை. வேறுவேறாக உள்ளது. நான் 15.03.2022 ல் அச்சிறுபாக்கம் பள்ளியில் இருந்து எங்கு பணி மாறுதல் பெற்று சென்றேன் என்றால் செம்மஞ்சேரி அரசு மேல்நிலைபள்ளிக்கு சென்றேன். மேற்படி பள்ளியில் இருந்து நான் பணிமாறுதல் சென்றபோது என்னுடைய லாக்கரில் என்னுடை காசோலையை விட்டு சென்றது தான் எனது எதிர் வாதம் என்றால் சரிதான். மேற்படி பள்ளியில் உள்ள லாக்கர் எனது தனிப்பட்ட லாக்கர் என்றால் சரிதான். மேற்படி லாக்கரின் சாவி என்னிடம் தான் இருக்கும் என்றால் அரசு பள்ளி என்பதால் மேற்படி வசதி இல்லை. அச்சிறுபாக்கம் பள்ளியில் உள்ள லாக்கர் எனது தனிப்பட்ட லாக்கர் என்றாலும் அதற்கான சாவி என்னிடம் தான் இருக்கும் என்றாலும் சரியல்ல. மேற்படி லாக்கரை என்னால் மட்டும் தான் சாவியை கொண்டு திறக்க முடியும் என்றால் மேற்படி லாக்கருக்கு சாவி கிடையாது.

3. பொதுவாக ஆசிரியர்கள் பணி மாறுதல் செல்லும் போது தனது உடைமைகள் அனைத்தையும் எடுத்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி லாக்கரில் எனது வங்கி கணக்கு காசோலை புத்தகத்தை விட்டு சென்றேனா அல்லது வழக்கு காசோலையை மட்டும் விட்டு சென்றேனா என்றால் காசோலையை மட்டும் தான் விட்டு சென்றேன். மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் ஒரு சில பொருட்களை விட்டு சென்றதாக சொல்லியுள்ளேன். ஏன் வழக்கு காசோலையை விட்டு சென்றேன் என்றால் எனக்கு 14.03.2022 அன்று மாலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மறுநாள் காலையில் என்னிடம் கொடுக்கப்பட்டது. அன்றைய தினமே மேற்படி பள்ளியில் இருந்து பணியிட மாறுதல் ஆகி செம்மஞ்சேரிக்கு சென்றுவிட்டேன். மேற்படி நான் பணியிட மாறுதல் ஆகி சென்ற பின்னர் எப்போது மேற்படி பள்ளிக்கு மேற்படி வழக்கு காசோலையை எடுக்க வந்தேனா என்றால் இல்லை.

4. வழக்கு காசோலையை தொலைத்தால் அதன் விளைவுகளை நன்கு அறிந்திருந்தும் எதற்காக நான் மேற்படி காசோலையை விட்டு சென்றுவிட்டேன் என்றால் தெரியாமல் விட்டு சென்றேன். மேற்படி காசோலையை குறித்து எப்போது நான் தெரிந்து கொண்டேன் என்றால் மனுதாரர் என் மேல் வழக்கு தொடுத்த பின்னர் தான் தெரிந்து கொண்டேன். புகார்தார் எனக்கு 08.10.2024 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் போது மேற்படி விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். புகார்தாரரை என் மீது வழக்கு தாக்கல் செய்யும் முன்னரே எனக்கு தெரியும் என்றால் தெரியும். அவரது மனைவி என்னுடன் தான் அச்சிறுபாக்கம் பள்ளியில் வேலைசெய்தார். புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதற்காக நான் அப்போது பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் என் மேல் தவறு இல்லாததால் அனுப்பவில்லை.

5. மேற்படி புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பிற்கு வழக்கு காசோலையை எனது லாக்கரில் நான் வேலை செய்த பள்ளியில் விட்டு சென்றதாக பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கு காசோலை காணாமல் போனது குறித்து எனது வங்கிக்கு அறிவிப்பு ஏதேனும் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு காசோலை தொலைந்ததாக எனக்கு தெரிந்த சமயத்தில் எனது கணக்கில் பணம் இருந்ததா என்றால் நான் பொதுவாக குறைந்தபட்சமாக தோராயமாக ரூபாய் 10 ஆயிரம் வைத்திருப்பேன். வழக்கு காசோலை காணாமல் போனது குறித்து காவல் நிலையத்திற்கு நான் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரரின் மனைவி எனது காசோலையை எடுத்து சென்றுவிட்டார் என்பது தான் எனது எதிர் வாதம் என்றால் சரிதான். புகார்தாரர் மனைவியிடம் நான் மேற்படி விவரம் குறித்து கேட்டேனா என்றால் இல்லை. புகார்தாரரின் மனைவி வழக்கு காசோலையை எடுத்து சென்றது குறித்து காவல் நிலையத்தில் அவர் மீது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

6. புகார்தாரரின் மனைவிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. மேற்படி அவர் மீது கல்வித்துறை மூலமாக நான் புகார் ஏதேனும் கொடுத்து விசாரணை நடந்ததா என்றால் இல்லை. உண்மையில் நான் வேலை செய்த பள்ளியில் எனது சக ஆசிரியர் வழக்கு காசோலை எடுத்திருந்தால் அவர் மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அவர் மீது கல்வித்துறை மூலமாக புகார் கொடுத்து விசாரணை நடத்தியிருப்பேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நான் வழக்கு காசோலையை கொடுத்து என்னுடன் பணி புரிந்த சக ஆசிரியரான அவர் மனைவி மீது

பொய் குற்றச்சாட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 2018 ம் வருடத்தில் இருந்தே நான் அச்சிறுபாக்கம் பள்ளியில் பணிபுரிந்ததில் இருந்து புகார்தாரரை எனக்கு தெரியும் என்றால் தெரியும். மேற்படி புகார்தாரர் அச்சிறுபாக்கத்தில் நடத்திவரும் நகை அடகு கடைக்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன்.

7. நான் எனது குடும்ப தேவைக்காக ரூபாய் 4 லட்சம் தொகையை புகார்தாரரிடம் இருந்து 28.08.2022 ம் தேதி அன்று பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. நான் 15.03.2022 அன்றே பணி இட மாறுதல் ஆகி சென்றுவிட்டேன். நான் மேற்படி தொகையை புகார்தாரரிடம் இருந்து வாங்கினேன் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 27.09.2024 ம் தேதியிட்ட வழக்கு காசோலையை நான் புகார்தாரரிடம் இருந்து பெற்றுக்கொண்ட ரூபாய் 4 லட்சத்திற்கு வட்டியுடன் சேர்த்து அவருக்கு ரூபாய் 555000 க்கு வழக்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை சட்டப்படி செயல்படுத்தக்கூடிய கடனுக்காக கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. புகார்தாரரை நான் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வழக்கு காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் கோரியுள்ள மனுவின் படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.